TNKR080007192022

**சார்பு நீதிமன்றம், குளித்தலை,**
**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ. பி.எல்.,**

**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாய நீதிபதி, குளித்தலை.**

**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10–ம் தேதி வெள்ளிக்கிழமை**

**MCOP No.275/2022**

**CNR No.TNKR08-000719-2022**

1. பாக்கியம், க/பெ.செந்தில்குமார், வயது 40
2. ஜெயசூர்யா, த/பெ.செந்தில்குமார், வயது 25
3. ஜெயபாரதி, த/பெ.செந்தில்குமார், வயது 24

மனுதாரர்களின் முகவரி, க.எண்.5/10, அரிஜன தெரு,
பிள்ளாபாளையம் கிராமம், கிருஷ்ணராயபுரம்,
கரூர் மாவட்டம். . . . மனுதாரர்கள்

/எதிர்/

அருண்குமார், த/பெ.நாகராஜு, வயது 26,
கொம்பாடிப்பட்டி, கிருஷ்ணராயபுரம்,
கரூர் மாவட்டம். . . . எதிர்மனுதாரர்

**உத்தரவு**

மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் இழப்பீடாக ரூ.25,00,000/–ஐ மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து 9% வட்டியுடன் செலுத்த உத்தரவிடக் கோரி மோட்டார் வாகன சட்டம் பிரிவு 140 மற்றும் 166–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 15.07.2022 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 24.03.2026 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 10.04.2026 |
| மனுதாரர்களுக்காக | : | திரு.K.மாரிமுத்து – வழக்கறிஞர் |
| எதிர்மனுதாரர் | : | நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார். |

1) **மனுவின் சுருக்கம் :–**

கடந்த 19.10.2018–ம் தேதி அன்று ஒரு செந்தில்குமார் என்பவர் TN 48 AA 4821 என்கின்ற அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் பிள்ளாபாளையம் டூ அய்யர்மலை செல்லும் சாலையில் மாலை 5.30 மணிக்கு மோட்டார் வாகன விதிமுறைகளை பின்பற்றி சாலையின் இடது ஓரத்தில் சென்று கொண்டிருந்த போது, அதே ரோட்டில் எதிர்திசையில் வந்த எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 47 Z 1683 என்கின்ற இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி, மேற்படி செந்தில்குமார் மீது மோதியதால், அவருக்கு உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டு, குளித்தலை அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று, மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்க்க, அங்கு வைத்து அவர் கடந்த 24.10.2018–ம் தேதி அன்று இறந்துபோய்விட்டார். மேற்படி விபத்து சம்பந்தமாக எதிர்மனுதாரர் மீது இலாலாபேட்டை காவல் துறையினரால் குற்ற எண்.268/2018 இ.த.ச பிரிவுகள் 279, 337–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள். விபத்து சமயத்தில் இறந்துபோன செந்தில்குமார் டிரைவர் வேலை செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.21,000/– வரை சம்பாதித்து வந்துள்ளார். மேற்படி விபத்திற்கு எதிர்மனுதாரரே பொறுப்பாளி என்பதால் மனுதாரர்களுக்கு இழப்பீடாக ரூ.25,00,000/–த்தை 9% வட்டியுடன் எதிர்மனுதாரர் செலுத்த உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

3) **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் :–**

**(அ)** இந்த வாகன விபத்தானது TN 47 Z 1683 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நடைபெற்றதா?

**(ஆ)** மனுதாரர்கள் இழப்பீட்டுத்தொகை பெற உரியவர்களா? ஆம் எனில், எவ்வளவு தொகை அவர்களுக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கது?

**(இ)** எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்க கடமைப்பட்டவரா?

**4)** மனுதாரர்கள் தரப்பில், முதல் மனுதாரரான பாக்கியம் என்பவர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு விஜயகுமார் என்பவர் ம.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக ம.சா.ஆ.12 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5) பிரச்சனை ஒன்றிற்கான தீர்வு :-**

***(அ)*** *இந்த வாகன விபத்தானது TN 47 Z 1683 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நடைபெற்றதா?*

**5 (1)** ம.சா.1 அவரது முதல் விசாரணையில், கடந்த 19.10.2018-ம் தேதி அன்று ஒரு செந்தில்குமார் என்பவர் TN 48 AA 4821 என்கின்ற அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் பிள்ளாபாளையம் டூ அய்யர்மலை செல்லும் சாலையில் மாலை 5.30 மணிக்கு மோட்டார் வாகன விதிமுறைகளை பின்பற்றி சாலையின் இடது ஓரத்தில் சென்று கொண்டிருந்த போது, அதே ரோட்டில் எதிர்திசையில் வந்த எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 47 Z 1683 என்கின்ற இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி, மேற்படி செந்தில்குமார் மீது மோதியதால், அவருக்கு உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டு, குளித்தலை அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று, மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்க்க, அங்கு வைத்து மேற்படி செந்தில்குமார் கடந்த 24.10.2018-ம் தேதி அன்று இறந்துபோய்விட்டார் என்றும், மேற்படி விபத்து சம்பந்தமாக எதிர்மனுதாரர் மீது இலாலாபேட்டை காவல் துறையினரால் குற்ற எண்.268/2018 இ.த.ச பிரிவுகள் 279, 337-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், விபத்து சமயத்தில் இறந்துபோன செந்தில்குமார் டிரைவர் வேலை செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.21,000/- வரை சம்பாதித்து வந்துள்ளார் என்றும், மேற்படி விபத்திற்கு எதிர்மனுதாரரே பொறுப்பாளி என்பதால் மனுதாரர்களுக்கு இழப்பீடாக ரூ.25,00,000/-த்தை 9% வட்டியுடன் எதிர்மனுதாரர் செலுத்த உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

**5 (2)** மேற்படி விபத்து சம்பந்தமாக எதிர்மனுதாரர் மீது கரூர் மாவட்டம், இலாலாபேட்டை காவல் துறையினரால் குற்ற எண்.268/2018 இ.த.ச பிரிவுகள் 279, 337–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்கின்ற சங்கதியை ம.சா.ஆ.1 ஆவணத்தின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாதது அவருக்கு எதிரான அனுமானத்தை உருவாக்குகிறது. எனவே, ம.சா.1–ன் வாய்மொழி சாட்சியத்தின் வாயிலாகவும், சான்றாவணங்களின் வாயிலாகவும், TN 47 Z 1683 என்கின்ற இருசக்கர வாகனத்தை எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்கின்ற சங்கதியை மனுதாரர்கள் நிரூபணம் செய்துள்ளார். இவ்வாறாக, பிரச்சினை ஒன்றிற்கு தீர்வு காணப்படுகிறது.

**6) பிரச்சினை இரண்டிற்கான தீர்வு :–**

**(ஆ)** *மனுதாரர்கள் இழப்பீட்டுத்தொகை பெற உரியவர்களா? ஆம் எனில், எவ்வளவு தொகை அவர்களுக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கது?*

**6 (1) வருமான இழப்பீடு :–**

இறந்துபோன செந்தில்குமாருக்கு மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் என்கின்ற சங்கதியை ம.சா.ஆ.4 ஆவணத்தின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. மனுதாரர்கள் தரப்பில், மேற்படி விபத்தில் இறந்துபோன செந்தில்குமார் விபத்திற்கு முன்னர் கூலி வேலை செய்து மாதமொன்றுக்கு ரூ.21,000/–ம் சம்பாதித்து வந்ததாக கூறியிருப்பினும், மேற்படி சங்கதிக்கு ஆதரவாக ஆவணங்கள் அதனையும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், விபத்து நடைபெற்றது 2018–ம் ஆண்டு என்பதாலும், 45 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– வரை சம்பாதித்து வந்திருக்கக்கூடும் என்பதாலும், விபத்து நடைபெற்ற காலக்கட்டம், விலைவாசி மற்றும் இதர காரணிகளைக் கொண்டு, மேற்படி இறந்துபோன செந்தில்குமாரின் மாத வருமானம் ரூ.10,000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. அதன்படி, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற National InsuranceCompany Limited Vs Pranay Sethi & others Reported in CDJ 2017 SC பக்கம் 1220 என்ற வழக்கில் கூறியுள்ளபடி, எதிர்கால வருமானமாக 40 முதல் 50 வயது வரை உள்ள நபர்களை பொறுத்து 25% தொகையை

எதிர்கால வருமானமாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என கூறப்பட்டுள்ளதால், மாத வருமானம் ரூ.10,000/—ல் 25% தொகையான ரூ.2,500/—ஐ சேர்க்க மொத்த வருமானமாக ரூ.12,500/— என நிர்ணயம் செய்யப்படுகிறது. இறந்துபோனவரின் வருமான இழப்பை கணக்கீடு செய்யும் போது, அந்த மாத வருமானத்தில் அவரை சார்ந்து இருந்த நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டும் என மாண்புமிகு உச்சநீதிமன்ற Smt.Saral Verma & Others Vs Delhi Transport Corporation & Another – 2009 (6) SCC பக்கம் 121 என்ற வழக்கில் கூறியுள்ளபடி, இறந்துபோன நபரை சார்ந்து இருக்கும் நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கழிவீனங்கள் செய்யப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்ட நிலையில், இந்த மனுவில் இறந்துபோன நபரை சார்ந்து மூன்று மனுதாரர்கள் உள்ளதாக கூறப்பட்டுள்ளதால், அதனை பொறுத்து 1/3 பாகத்தை கழித்துக்கொள்ள வேண்டும் என கூறப்பட்டுள்ளது. அதன்படி ரூ.4167/— ஐ கழிக்க, இறந்து போன நபரின் மாத வருமானம் ரூ.8,333/— என நிர்ணயம் செய்யப்படுகிறது. இறந்துபோன நபரின் மொத்த வருமான இழப்பை கணக்கீடு செய்யும் வகையில், அவரின் வயதின் அடிப்படையில் பெருக்கல் குறியீட்டு எண் முறையில் நிர்ணயம் செய்யப்படவேண்டும். அதனை பொறுத்து ஏற்கனவே முடிவு செய்துள்ள படி இறந்துபோன நபருக்கு 45 வயது என முடிவு செய்யப்பட்டுள்ளதால், மாண்புமிகு உச்சநீதிமன்ற Smt.Saral Verma & Others Vs Delhi Transport Corporation & Another – 2009 (6) SCC பக்கம் 121 என்ற வழக்கில் கூறியுள்ளபடி 41 வயது முதல் 45 வயது வரை உள்ள நபர்களை பொறுத்து பெருக்கல் குறியீட்டு எண் 14 ஆல் பெருக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளதால் மாத வருமானம் ரூ.8333 X 12 X 14 = ரூ.13,99,944/— இறந்துபோன செந்தில்குமாரின் மொத்த வருமான இழப்பீடாக நிர்ணயம் செய்யப்படுகிறது.

**6 (2) இல்வாழ்க்கை மற்றும் பாச இழப்பீடு :—**

மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பாணை National Insurance Company Limited Vs Pranay Sethi & others Reported in CDJ 2017 SC பக்கம் 1220 என்ற வழக்கின் வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு மூன்று வருடத்திற்கும், அந்த செலவினங்களை பொறுத்து உயர்த்தி வழங்க வேண்டும் என கடந்த 31.10.2017 தேதியிட்ட

உத்தரவின்படி, Loss of Estate என்கின்ற முறையில் ரூ.18,000/—மும், இறந்துபோன நபரின் இறுதிச்சடங்கு செலவிற்காக ரூ.18,000/— கிடைக்கத்தக்கது. மேற்படி இறந்துபோன செந்தில்குமாரின் இல்வாழ்க்கை இழப்பீட்டிற்காக முதல் மனுதாரருக்கு ரூ.48,000/—மும், பாச இழப்பீட்டிற்காக இரண்டு, மூன்று மனுதாரர்களுக்கு தலா ரூ.48,000/— வீதம் ரூ.96,000/—மும் கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. இவ்வாறு மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட நிலையில், இவை தவிர வேறு எந்த தலைப்புகளிலும் மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத்தொகை கிடைக்கத்தக்கது என மனுதாரர்கள் தரப்பில் தீர்ப்பாயத்தில் எடுத்துரைக்கப்படவில்லை. மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத்தொகை குறித்து கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்படுகிறது.

6 (3) **கணக்கீடு :—**

| | | |
|---|---|---|
| இறந்துபோன நபரின் மொத்த வருமான இழப்பிற்காக | ரூ. | 13,99,944/— |
| முதல் மனுதாரரின் இல்வாழ்க்கை இழப்பீட்டிற்காக | ரூ. | 48,000/— |
| இரண்டு, மூன்று மனுதாரர்களின் பாச இழப்பீட்டிற்காக | ரூ. | 96,000/— |
| Loss of Estate | ரூ. | 18,000/— |
| இறுதி சடங்கு செலவு | ரூ. | 18,000/— |
| **மொத்த இழப்பீடு** | **ரூ.** | **15,79,944/—** |

**7) பிரச்சனை மூன்றிற்கான தீர்வு :—**

***(இ)*** *எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்க கடமைப்பட்டவரா?*

TN 47 Z 1683 என்கின்ற இருசக்கர வாகனத்தை எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளதால், மேற்படி இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் என்கின்ற கோதாவில் எதிர்மனுதாரரே மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை செலுத்த கடமைப்பட்டவர் என பிரச்சினை மூன்றிற்கு விடை காணப்படுகிறது.

8) **முடிவாக,**

**(அ)** மனுதாரர்களின் மனுவானது பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

**(ஆ)** எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு இழப்பீடாக **ரூ.15,79,944/-ஐ** மனுதாரர்கள் மனு தாக்கல் செய்த நாள் முதல் தொகையை வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5 சதவீத வட்டி மற்றும் செலவு தொகையுடன் கொடுக்க வேண்டும் என்றும்,

**(இ)** மாண்புமிகு உச்சநீதிமன்ற உரிமையியல் மேல்முறையீட்டு எண்.4299/2025 நாள் : 18.03.2025-ல் வழங்கிய தீர்ப்பின் படியும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற ROC No.55584/2025/Sct Dated : 02.07.2025-ல் அனுப்பிய சுற்றறிக்கையின் படியும் மேற்படி தொகையை எதிர்மனுதாரர் கீழ்க்கண்ட வங்கி கணக்கில்,

| மனுதாரர் | Amount | Account Number | Bank | Branch | IFSC Code | MICR Code |
|---|---|---|---|---|---|---|
| Bakkiyam | ரூ.5,26,648/- | 2047139 8606 | State Bank of India | Krishnaraya-puram | SBIN0015824 | 639002103 |
| Jayasuriya | ரூ.5,26,648/- | 02540100 0046309 | Indian Overseas Bank | Lalapet | IOBA0000254 | 639020103 |
| Jayabharathi | ரூ.5,26,648/- | 325625 28885 | State Bank of India | Krishnaraya-puram | SBIN0015824 | 639002103 |

உத்தரவு பிறப்பித்த ஒரு மாத காலத்திற்குள் வைப்பீடு செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையை வைப்பீடு செய்யப்பட்ட விபரத்தை எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்திற்கு குறிப்பாணை மூலம் தெரிவிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

**(ஈ)** மனுதாரர்கள் ஏற்கனவே நீதிமன்ற கட்டணமாக ரூ.375/- செலுத்தியது போக மீதமுள்ள நீதிமன்ற கட்டணமான ரூ.14,797/-ஐ 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் இந்த உத்தரவு செல்லத்தக்கதல்ல.

**(உ)** வழக்கறிஞர் கட்டணம் ரூ.22,799/- என நிர்ணயம் செய்யப்படுகிறது.

**(ஊ)** மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பு வழக்கு எண்.Tr.Cmp Nos.264 to 281 of 2020 M/s.Cholamandalam Ms General Insurance Company Ltd., V/s.

Mr.Ayyanar and others நாள் : 11.05.2020 அன்று பிறப்பித்த உத்தரவின் படி நிறைவேற்றாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே, தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கப்படாது.

| **செலவுத் தொகை விபரம் ரூ.** | **மனுதாரர்கள் தரப்பில்** |
|---|---|
| மனுவிற்கான நீதிமன்ற கட்டணம் | ரூ.15,172/- |
| வக்காலத்து | ரூ.10/- |
| வழக்கறிஞர் ஊதியம் | ரூ.22,799/- |
| **மொத்தம்** | **ரூ.37,981/-** |

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.04.10 17:29:50 +0530

தீர்ப்பாய நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :-**

ம.சா.1 – பாக்கியம் (முதல் மனுதாரர்)
ம.சா.2 – விஜயகுமார்

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :-**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை |
| ம.சா.ஆ.2 | செந்தில்குமார் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை |
| ம.சா.ஆ.3 | செந்தில்குமார் என்பவரின் இறப்பு சான்று |
| ம.சா.ஆ.4 | செந்தில்குமார் என்பவரின் வாரிசு சான்று |
| ம.சா.ஆ.5 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| ம.சா.ஆ.6 | எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| ம.சா.ஆ.7 | முதல் மனுதாரரின் ஆதார் அட்டை |
| ம.சா.ஆ.8 | இரண்டாவது மனுதாரரின் ஆதார் அட்டை |
| ம.சா.ஆ.9 | மூன்றாவது மனுதாரரின் ஆதார் அட்டை |
| ம.சா.ஆ.10 | செந்தில்குமார் என்பவரின் ஓட்டுநர் உரிமம் |

| | |
|---|---|
| ம.சா.ஆ.11 | ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1/2019-ன் தீர்ப்புரை |
| ம.சா.ஆ.12 | ம.சா.2-ன் ஆதார் அட்டை |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :-** இல்லை
**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-** இல்லை

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.04.10 17:29:42 +0530

தீர்ப்பாய நீதிபதி,
குளித்தலை.